### 6. விதி 110-இன் கீழ் சட்டத்துறை அமைச்சரின் அறிக்கை

**ஹஜ் பயணிகளுக்கு விமானப் பயண வசதிகள் செய்யப் பட்டுள்ளது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கையினைப் படைப்பார்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் சென்னையிலிருந்து ஜித்தாவிற்கும், ஜித்தாவிலிருந்து சென்னைக்கும் நேரடி விமானங்கள் விடும்படி விரும்புகின்றபடியால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முயற்சியின் பயனாக சென்ற வருடம் சென்னை—ஜித்தாவிற்கு நேரடியாக விமானங்கள் விடப்பட்டன. ஆனால், ஜித்தாவிலிருந்து சென்னை திரும்பும் வழியில் ஹஜ் பயணிகள் பம்பாயில் இறங்கி, பிறகு வேறு விமானம் மூலம் சென்னை வந்து சேரும்படி நேர்ந்தது. இது ஹாஜிகளுக்கு வசதியாக இருக்கவில்லை என்பதால் இவ்வருடம் நேரடியாக ஹஜ் விமானங்கள் விடப்படவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.

தமிழக முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று 20-5-1990 முதல் ஒவ்வொரு ஞாயிறும், ஏர் பஸ் விமானங்கள் சென்னையிலிருந்து ஹாஜிகளை ஏற்றிக்கொண்டு செல்லஏர் இந்திய நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கிறது. இவ்விமானங்கள் தொழில் நுட்பக் காரணமாகச் சிறிது நேரம் பம்பாயில் நிற்கும். ஆனால், பயணிகள் பம்பாயில் இறங்க வேண்டிய தேவையில்லை. இவ்வாறு ஆறு விமானங்கள் ஞாயிறுதோறும் சென்னையிலிருந்து புறப்பட்டு ஜித்தாவிற்கு மொத்தம் 1,242 பயணிகளை ஏற்றிச் செல்லும். ஹஜ் விமானங்கள் சென்னையிலிருந்து ஞாயிறு மதியம் 12-50 மணிக்குப் புறப்பட்டு அதே நாள் உள்ளூர் நேரப்படி மாலை 7 மணிக்கு ஜித்தா சென்றடையும். ஒவ்வொரு விமானத்திலும் 207 பயணிகள் பயணம் செய்வார்கள்.

ஹஜ் முடிந்து திரும்பி வரும்பொழுது ஹாஜிகள் ஜம்போ ஜெட் மூலம் ஜித்தாவிலிருந்து சென்னைக்கு நேரடியாக வருவார்கள்.

7—7—1990, 21—7—1990 மற்றும் 4—8—1990 ஆகிய சனிக்கிழமைகளில் இவ்விமானங்கள் விடப்படும். இவ்விமானங்கள் உள்ளூர் நேரப்படி மாலை 4-15 மணிக்கு ஜித்தாவிலிருந்து புறப்பட்டு சனி, ஞாயிறு நள்ளிரவு 12-30 மணிக்கு சென்னை வந்து சேரும். ஒவ்வொரு விமானத்திலும் 377 பயணிகள் பயணம் மேற்கொள்வர். மீதமுள்ள பயணிகள் சென்னை வருவதற்கு தனி ஏற்பாடு செய்யப்படும்.

10-50 மணி

ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த அறிக்கை தகவலுக்காக பேரவையின்முன் வைக்கப் படுகிறது. இந்த முயற்சியை எடுத்துக்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், அனுமதி அளித்த பாரதப் பிரதமர் அவர்களுக்கும் ஹஜ் குழுவின் சார்பாகவும், ஹஜ் பயணிகள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

5.113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலை யொட்டி சிலர் உயிரிழந்ததால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அது பற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து—தொடர்ச்சி

*திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பேரவை விதி 113-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு.குமரி அனந்தன் அவர் களை நீங்கள் அனுமதித்தீர்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபோது, தன்னுடைய கடைசிப்பகுதியாக** குறிப்பிட்டிருக்கிறார். தங்கள் அனுமதியோடு எழுப்பப்பட்டி ருக்கிறபோது இந்த வரிகள் அவை குறிப்பிலிருந்து நீக்கப்படு வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற ஒழுங்குப் பிரச் சினையை தங்களுடைய தீர்ப்பிற்காகக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வரி நீக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் தங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். அதன் மீது தீர்ப்பு அளிக்க வேண்டிய

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்ற தொடர் தேவை யில்லை. என்னுடைய விளக்கம் இது என்பதோடு அது நிற்கும். அதனால் தவறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே** என்பதைத் தங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நானே இங்கே தீர்ப்பாக கொடுக்கவில்லை. இது நான் தங் களுக்கு எழுதிய கடிதம். கடிதத்தில் தங்களுடைய தகவலுக்காக நான் சொல்கிறேன். எப்படி அது தவறாக இருக்க முடியும்? எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் இங்கே வருகிறது? I want to know how a point of order arises.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.